[1981 மார்ச் 24

கொள்ளப்பட்டன, எவ்வளவு ஒன்றியங்களில் வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைப் புத்தக வடிவில் போட்டு ஒவ்வொரு சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று ஏற்கனவே ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே எந்தெந்தத் தொகுதிகளில் என்னென்ன வேலைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன முடிக்கப்பட்டிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியவேண்டும் என்பதற்காகத்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எந்த மாவட்டத்தில் இந்தக் குறைபாடு இருந்து இது போன்ற புத்தக வடிவில் எங்களுக்குக் கிடைக்கவில்லை என்று தெரிவித்தால் உடனடியாக நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம்.

ஸ்கீம் வழித்தடங்களில் ஓடும் பஸ்களை தேசிய மயமாக்குதல்.

*வினா எண் 466—திரு. ஆர். கே. பெருமாள்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஸ்கீம் வழித்தடங்களில் ஓடும் பேருந்துகளை தேசியமயமாக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த வழித்தடங்களில் எடுககப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ) ஸ்கீம் வழித்தடங்களில் ஓடும் பேருந்துகளை மட்டுமின்றி அனைத்துப் பேருந்துகளையும் மாவட்டவாரியாகநாட்டுடமையாக்க 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயணிப் பேருந்துகள் (மற்றும்) ஒப்பந்த பேருந்துகள் (கையகப்படுத்தல்) சட்டம் வகை செய்கிறது. இச்சட்டத்தின் மீது டெல்லி உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. ரமணி: அரசாங்கத்தினுடைய போக்குவரத்து தேசியமயமாக்கும் நல்ல திட்டம் வெற்றி பெறக்கூடிய முறையில் வழித்தடங்களில் ஓடுகிற தனியார் பஸ்களுடைய உரிமங்கள் காலாவதியாகும்போது அந்த இடத்தில் அரசாங்கத்தினுடைய போக்குவரத்துக் கழகங்கள் விண்ணப்பித்தால் அவர்களுக்கு முதல் உரிமம் கிடைக்கும்படி நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா? அப்படிப் போட்டும் ஒரு வருடம், இரண்டு வருடங்கள் அந்த விண்ணப்பங்களுக்கு அனுமதி அளிக்காமல் தனியாருக்கு மறுபடியும் சில நிபந்தனைகளோடு அனுமதி அளித்துள்ள பிரசினை தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் போன்ற கழகங்களில் வந்துள்ளதை அமைச்சர் அவர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்களா? அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

1981 மார்ச் 24]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: நான் ஏற்கெனவே சொல்லியபடி உச்ச நீதிமன்றத்தில் இதுபற்றிய தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இருந்த லும் பல சட்டங்களை நாம் வைத்துக் கொண்டு தனியார் பேருந்துகளை நாம் கையகப்படுத்த வேண்டுமென்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று அரசு எண்ணினாலும் கூட, தேசிய மயமாக்குவதை ஒரு கொள்கையாக அரசாங்கம் கொண்டிருந்தாலும் கூட இன்றையதினம் இருக்கும் சூழ்நிலையில் நடைமுறையில் பார்த்தால் சட்டமன்ற உறுப்பினர்களும் பொதுமக்களும் பேருந்து வேண்டுமென்று, பேருந்து இல்லாத கிராமங்கள் நிறைய இருக்கின்றன என்று சொல்லி மனு கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே அதற்கு முக்கியத்துவம் கொடுத்து முதலில் பேருந்துகளை நாம் கொடுத்து, அதில் ஓர் தன்னிறைவு பெற்ற பின்பு தனியார்களுடைய பேருந்துகளை எடுக்கலாம் என்ற நடவடிக்கைகள் எடுப்போமானால் அது வெற்றிகரமாக இருக்கும், சிறப்பாக இருக்கும் என்று அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது. எவ்வளவோ கிராமங்களில் பேருந்து இல்லாமல் பேருந்துகள் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கும் போது அவர்களுக்குக் கொடுக்காமல் ஏற்கெனவே ஓடிக்கொண்டிருக்கிற பேருந்துகளை எடுக்க அரசு செலவழிப்பது என்பது அவ்வளவு பொருத்தமாயிருக்காது என்ற அடிப்படையில்தான் தன்னிறைவு ஏற்படுத்திய பிறகு அந்த நடவடிக்கைகள் படிப்படியாக எடுக்கப்பட வேண்டும் என்று அரசு திட்டமிட்டுள்ளது.

திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசினுடைய திட்டத்தின்படி போக்குவரத்து சாலைகளை தமிழ்நாடு ஸ்கீம் சாலைகளை தேசிய மயமாக்கப்பட்டதன் காரணமாக, அதற்கு முன்னுதாரணமாக மதுரை ராஜபாளையம், மதுரை-திருநெல்வேலி, மதுரை-தூத்துக்குடி ஆகிய மூன்று சாலைகளையாவது எடுத்துக் கொண்டு, அந்த சாலைகளிலே தனியார் பேருந்துகளுக்குப் பதிலாக அரசுப் பேருந்துகளாக மாற்றும் உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத் தப் பொறுத்த வரையில் எங்கெங்கே பேருந்து இல்லாமல், கிராமங்களுக்குப் பேருந்துகள் வேண்டுமென்று கேட்கின்றார்களோ, அங்கேயெல்லாம் அரசாங்கம் பேருந்துகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. எல்லாக் கிராமங்களுக்கும் கொடுக்கப்பட்டு, வேறு கிராமங்கள் பேருந்துகளே இல்லாமல் இல்லை என்ற நிலை வரும்போது, தனியார் பேருந்துகளை விடுவதற்கான நடவடிக்கை எடுப்போம்.

திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேருந்துகள் இல்லாத கிராமங்களிலே அரசாங்கப் பேருந்துகள் கொடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நன்றி. ஆனால், அரசாங்கத் திட்டத்தின்படி தேசியமயமாக்கப்பட்ட சாலைகளை நாம் எப்படியும் எடுக்க

வேண்டுமென்று ஒரு மையக் கருத்தாக வைத்திருக்கிறோம். அதற்கு முன்னுதாரணமாக, நான் குறிப்பிட்டுள்ள சாலைகளை எடுத்தால் நலமாக இருக்கும். எனவே, இதைப்பற்றி மறு பரிசீலனை செய்து, இந்தத் தேசியமயமாக்கப்பட்ட சாலைகளில் அரசுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக பேருந்து விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற்கெனவே அப்படிப்பட்ட சாலைகளில் நாம் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். அது போக, எப்படியாவது தனியார் போக்குவரத்துக்களை எடுத்துக் கொள்ளவேண்டுமென்பது மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கை என்று கருதுகிறேன். இதிலே, தன்னிறைவு ஏற்பட்டதற்குப் பிறகு, அவைகளும் எடுத்துக் கொள்ளப்படும். அதைப்பற்றி கவலை வேண்டாம் என்பதை மறுபடியும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு விமானப் போக்குவரத்துக் கழகம்.

*வினா எண் 467—திரு. சு. முத்துகிருஷ்ணன் திரு. இல. பலராமன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசின் விமானப் போக்குவரத்துக் கழகம் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இதன் மூலம் தமிழகத்தில் எந்த எந்த இடங்கள் சுற்றுலாவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது?

(இ) 1976-க்கு முன்பு விமானப் போக்குவரத்துக் கழகம் அமைக்கும் திட்டம் பரிசீலிக்கப்பட்டதா?

(ஈ) ஆம் எனில், அதன் முடிவு யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) தமிழ்நாடு அரசின் விமானப் போக்குவரத்துக் கழகம் என தனி அமைப்பு அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

எனினும், இந்திய விமானப் போக்குவரத்தில் சேராத, சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் மாவட்டங்களின் தலை நகரங்களை இணைக்கும் குறுகிய விமானப் போக்குவரத்தை நடத்துவதற்கு (Feeder Airlines Service) மைய அரசின் அனுமதி கோரப்பட்டது. மேலும், இதன் தொடர்பாக மூன்றாவது நிலை விமானப் போக்குவரத்து அமைப்பு (T ird Level Ai Services) மத்தியத் துறைத் திட்டத்தின் கீழ் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க மைய அரசுக்கு கோரிக்கை அனுப்பப்பட்டது. மூன்றாவது நிலை விமான போக்குவரத்து அமைப்பை வடகிழக்கு பகுதியில் முதலில் அமைக்க மத்திய அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளது என்றும், மற்ற

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS